**25 பாலங்களை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டம் - 2025**

-----------------------------------------------------------------------------------------------

25 பாலங்களை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2014 சனவரி 30 ஆம் திகதிய கடன் உடன்படிக்கை இல 886 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மேற்கு, சப்ரகமுவ, கிழக்கு தெற்கு, வடமேற்கு, மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் பயணிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்கான அதிகரித்த தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கும் வாகன செயற்பாடுகள் மற்றும் வீதி பராமரிப்பு கிரயம், பிரயாண காலம், விபத்துக்கள் என்பவற்றை குறைப்பதன் மூலம் தொடர்புபட்ட பிரதேசங்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதற்குமாக தொடர்புபட்ட பிரதேசங்களில் நடைபாதைகளைக் கொண்ட இரண்டு நிரல்களுடனான 25 பாலங்களை மீள்நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். தொகுதி 01, 02 மற்றும் 03 ஆகிய மூன்று கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 4,632 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 35.41 மில்லியனாக இருந்ததுடன் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பட்டுள்ளது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2015 செப்தெம்பர் 07 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தெம்பர் 05 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்திசெய்தல் திகதி தொடக்கத்தில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கும் பின்னர் 2025 திசெம்பர் 31 ஆந் திகதிக்கும் நீடிக்கப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு விடயங்கள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல.DMA/02/2024 இன் பிரிவு 5 இன் பிரகாரம், ஓர் செயற்திட்டத்தினை முடிவுறுத்தும்போது, கணக்குகளை மூடுவதற்கு முன்னர் அனைத்துச் சொத்துக்களும் பயன்படுத்தப்பட்டு அனைத்துப் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்படல் வேண்டும். இருப்பினும், முடிவுறுத்தல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 2,565.35 மில்லியன் தொகையான சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டிறாததுடன் ரூபா 396.91 மில்லியன் தொகையான பொறுப்புக்களும் கொடுத்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2,962 | உடன்படவில்லை. விசேட செயற்திட்டங்கள் முகாமைத்துவ பிரிவின் (SPMU) செயற்திட்ட முகாமைத்துவ பிரிவானது 2023/01/31 இல் மூடப்பட்டிருந்து. PMU மூடப்பட்டதன் பின்னர் இச் செயற்திட்டமானது RDA வின் ஓர் பிரிவாக RDA வின் பணிப்பாளர் நாயகத்தினால் கையாளப்படுகின்றது. மிகுதி வேலைகள் உள்நாட்டு நிதிகளினைப் பயன்படுத்தி தொடரப்படுகின்றன. முடிவுறுத்தல் நிதிக் கூற்றுக்கள் அத் தீர்மானத்தின் அடிப்படையிலே தயாரிக்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் மிகுதி வேலைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகள் மூடப்படுவற்கு முன்னர் அனைத்துச் சொத்துக்களும் பயன்படுத்தப்பட்டு அனைத்துப் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 மற்றும் 2022 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்த 20 பாலங்களின் கட்டுமான பெறுமதி மொத்தமாக ரூபா 3,041.87 மில்லியனானது முடிவுறுத்தல் நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,702.63 மில்லியனாக காட்டப்பட்டிருந்து. எனவே, இம் மீதிகளிற்கிடையே ரூபா 339.24 மில்லியனான ஓர் வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது. | 339.24 | உடன்பட்டனர். | நிதிக் கூற்றுக்களில் கையெலுத்திட முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் (இ.பொ.க.நி) இணங்குவதனை கணக்காளர் உறுதி செய்ய வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை / கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2024 ஒக்டோபர் 24 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்கை இல DMA/02/2024 மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் 2025 மே 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட சொத்துக்கள் மாற்றல் மீதான துணை வழிகாட்டி. | பூரணப்படுத்தப்படாத படிவங்களினைப் பயன்படுத்தி ரூபா 20.28 மில்லியன் தொகையான கணிணிகள், மடிக் கணிணிகள் மற்றும் போக்குவரத்து கணிப்பீட்டு முறைமை என்பனவற்றினை செயற்திட்டமானது கையளித்திருந்தது. சொத்துக்களினை மாற்றுதல் மற்றும் கையேற்றலிற்காக பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் நிதிப் பிரமாணங்கள் இல 753(1) மற்றும் (2) இன் பிரகாரம் சொத்துக்களை வழங்கள் மற்றும் பெற்றுக் கொள்ளலிற்காக பயன்படுத்தப்படும் பொதுப் படிவங்கள் இல. 141 மற்றும் 219 என்பவற்றுடன் ஒப்பிடும் போது பூரணப்படுத்தப்படாததாக இருந்தது, மேலும் அச் சொத்துக்கள் செயற்திட்ட முகாமைத்துவ வழிகாட்டியின் பந்தி 5.5 இன் பிரகாரமும் மாற்றப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை. 2024 ஒக்டோபர் 24 ஆம் திகதிய சுற்றறிக்கை இல DMA/02/2024 இன் கீழ் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினாலான செயற்திட்ட முகாமைத்துவ வழிகாட்டி மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் 2025 மே 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட சொத்துக்கள் மாற்றல் மீதான துணை வழிகாட்டி ஆகியன வெளியிடப்பட முன்னர் 2018 – 2021 காலப்பகுதியின் போது இச் சொத்துக்கள் மாற்றப்பட்டிருந்தது. இவ் அனைத்து மாற்றல்களும் 2018-2021 காலப்பகுதியின் போது காணப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் சொத்துக்கள் நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் மாற்றல் செய்யப்படல் வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஒக்டோபர் 20 இல் முடிவுறுத்தப்பட்ட பிரதான பாலங்கள் நிர்மான செயற்திட்டத்திற்கு (MBCP) வரிசையமைச்சின் அனுமதியினை பெற்றுக்கொள்ளாமல் 2019 ஆம் ஆண்டில் PMU வினால் கூட்டுமொத்தம் ரூபா 10.1 மில்லியன் மாற்றப்பட்டிருந்தது. அதனால் மேற்கூறப்பட்ட 10.1 மில்லியனானது நிதி | அக் காலப்பகுதியின் போது பொல்லத்துமோதர பாலமமைப்பிற்காக சுவீகரிக்கப்பட்ட காணித் துண்டுகளின் உரிமையாளர்களினால் ஓர் எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இக் கொடுக்கல் வாங்களினை மீளாய்வு செய்ய வேண்டியதுடன் உரிய உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுங்குவிதிகள் இல. 127, 128 & 129 என்பனவற்றினை மீறி, எவ்வித பொருட்கள் அல்லது சேவைகளும் பெற்றுக்கொள்ளப்படாமல் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டம் முடிவுறுத்தப்பட முன்னர் இத் தொகையினை செயற்திட்டமானது மீளஅறவிட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | MBCP வாக்குப்பேரேட்டின் கீழான கட்டு நிதிகளின் பற்றாக்குறை காரணமாக, 25 பாலங்கள் செயற்திட்டத்தின் கீழ் காணப்பட்ட கட்டுநிதியினைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், தேவையான அனுமதி கவனக் குறைபாட்டால் பெறப்படவில்லை. அதனைத் தொடர்ந்து, MBCP ஆனது 2020 இல் மூடப்பட்டதன் பெறுபேறாக, அத் தொகை அச் செயற்திட்டத்திடமிருந்து மீள அறவிட முடியாமல் போனது. | |
| (ஆ) | எவ்வித தொடர்புடைய பௌதீக செயலாற்றலும் இல்லாமல் 03 வருடங்களிற்கு மேலாக வேலை ஆரம்பிப்பு முற்பணமானது ஒப்பந்ததாரரினால் தக்கவைக்கப்பட்டிருந்தது. ஓர் கட்டமைக்கப்பட்ட மீளப்பெறல் பொறிமுறை மற்றும் ஓர் வட்டி குறைப்புத்திட்டம் என்பன இல்லாமை காரணமாக ஒப்பந்தப் பொதி 02 இன் கீழ் வேலை ஆரம்பிப்பு நிதிகளை தொடர்ச்சியாக பயன்படுத்துவதன் ஊடாகவும் தாமத கொடுப்பனவுகளிற்கான வட்டியினை பெறுவதற்கு தகுதியுடையவர்களாக இருப்பதனூடாகவும் இரட்டை நிதி நன்மைகளை ஒப்பந்ததாரர் வினைத்திறனாக பெற்றிருந்தார். இவ்விடயமானது தற்போதைய திகதி வரை தீர்க்கப்படாமல் இருந்ததனால் இது ஒப்பந்த நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் ஓர் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் இது அரசாங்கத்திற்கு பாதகமான நிதி விளைவினையும் ஏற்படுத்த கூடும். | உடன்பட்டனர். | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38(1)(இ) வின் பிரகாரம் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் வேலை ஆரம்பிப்பு முற்பணம் மற்றும் கொடுப்பனவுகளை மீளப்பெற்றுக்கொள்வதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்து மூல அறிவுறுத்தல்களும் வழங்கப்படுதல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த உடன்படிக்கையின் உபபிரிவு 11.9 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரின் செயலாற்றல் ஆனது பொறியியலாளரினால் செயலாற்றல் பத்திரத்திரம் வழங்கப்படும் வரை பூர்த்திசெய்யப்பட்டதாக கருதப்படல் ஆகாது இருப்பினும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட அனைத்து பாலங்களிற்கும் அச்சான்றிதல்களானது வழங்கப்பட்டிராததுடன் அப்பாலங்களிற்கான | உடன்பட்டனர். | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38(1)(இ) வின் பிரகாரம் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் செயலாற்றல் பத்திரத்தினை வழங்கும்போது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் |

| | | | |
|---|---|---|---|
| | குறைபாட்டு நிபர்த்தி காலப்பகுதியானது ஏற்கனவே முடிவடைந்தும் இருந்தது. எனவே PMU ஆனது ஒப்பந்தங்களை முடிவுறுத்துவதற்கான முறையான நடைமுறைகளை பின்பற்றாமல் ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகளை உழைத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கியிருந்தது. | | எழுத்து மூல அறிவுறுத்தல்களும் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2024 ஒக்டோபர் 24 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை இல DMA/2/2024 இன் கீழ் வெளியிடப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ வழிகாட்டியின் பாகம் 5 இன் பிரகாரம், செயற்திட்டங்களினை பூர்த்திசெய்தல் மற்றும் சொத்துக்களினை மாற்றல் என்பவற்றிற்கான நடைமுறை தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இச் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலானது அவ் வழிகாட்டியியுடன் இணங்கி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | PMU ஆனது 2023 சனவரி 31 இலிருந்து முடிவுறுத்தப்பட்டது. முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை இல DMA/2/2024 இன் கீழ் வெளியிடப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ வழிகாட்டி 2024 இல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இவ் வழிகாட்டி பொருத்தமற்றது. இருப்பினும், அந் நேரத்தில் நடைமுறையில் காணப்பட்ட RDA வழிகாட்டிகள் சொத்துக்களை கையளிக்கும் போது பின்பற்றப்பட்டது. | விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களினை முடிவுறுத்துவதற்காக முகாமைத்துவ கணக்கய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டியினை பின்பற்றி இணங்குவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| i. | பிரிவு 5.2 இன் பிரகாரம், செயற்திட்டத்தினை பூர்த்தி செய்தல் மற்றும் சொத்துக்களை மாற்றல் செய்தல் என்பனவற்றின் போது, செயற்திட்ட பூர்த்தியாக்களிற்காக வேலைகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்ட ஓர் விரிவான திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட தரப்பினர்களை அடையாளம்காணல், அவர்களின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை தெளிவாக வரையறுத்தல் மற்றும் பூர்த்தியாக்கலிற்கான ஓர் குறிப்பிட்ட கால வரையரையினை நிறுவுதல் என்பன அவசியமாகும். இருப்பினும், இச் செயற்திட்டத்தினை முடிவுறுத்துவதற்காக அவ்வாறான ஓர் விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். | விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களினை பூர்த்தி செய்து முடிவுறுத்துவதற்காக முகாமைத்துவ கணக்கய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| ii. | பிரிவு 5.7 இன் பிரகாரம், ஓர் செயற்திட்ட முடிவுறுத்தலின் போது செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட அனைத்து சட்டபூர்வ கொடுப்பனவுகள் அதேபோல் பயன்பாட்டுப் பட்டியல்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் என்பன தீர்க்கப்படல் வேண்டும். இருப்பினும், ரூபா 63.21 மில்லியன் தொகையான அட்டுறுச் செலவுகள் மற்றும் | உடன்பட்டனர். | விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களினை பூர்த்தி செய்து முடிவுறுத்துவதற்காக முகாமைத்துவ கணக்கய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையுடன் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 252.04 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய வெளிநாட்டு உதவி என்பன 2026 மார்ச் 31 இல் கூட கொடுத்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | இணங்குவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| iii. | பிரிவு 5.8 இன் பிரகாரம், வங்கி கணக்கினை மூடுவதற்கு திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் (TOD) வெளியிடப்பட்ட படிவம் இல TOD/BA/03, அத்துடன் வேறு ஏதாவது தொடர்புபட்ட ஆவணங்கள் என்பன TOD இற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். செயற்திட்டம் சார்பாக திறக்கப்பட்ட அனைத்து வங்கிக் கணக்குகளும் பூச்சியமாக்கப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்திய பின்னர் பொது நிதிச் சுற்றறிக்கை இல 2/2022 இன் பந்தி 6 இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க இச் சமர்ப்பிப்பானது மேற்கொள்ளப்படல் வேண்டும். இருப்பினும், இலங்கை வங்கியிலுள்ள 7040419 ஆம் இலக்முடைய செயற்திட்ட வங்கிக் கணக்கானது 2026 மார்ச் 31 இல் கூட மூடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட வங்கிக் கணக்கானது முடிவுறுத்தல் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் வரை மூடப்பட்டிருக்கவில்லை. இலங்கை வங்கிக் கணக்கிலக்கம் 7040419 இனை மூட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களினை பூர்த்தி செய்து முடிவுறுத்துவதற்காக முகாமைத்துவ கணக்கய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| iv. | பிரிவு 5.12 இன் பிரகாரம், செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டதும், அனைத்து துணை ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் கொடுப்பனவுகளுடன் தொடர்புபட்ட புத்தகங்கள் என்பன அமுல்படுத்தல் முகவரிற்கு மாற்றப்படும். இருப்பினும், அவ் ஆவணங்கள், பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் கொடுப்பனவு விபரங்கள் என்பன உரிய நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, கடந்தகால கொடுப்பனவுகளின் உண்மைத்தன்மை மற்றும் பூரணத்துவம் என்பவற்றை உறுதிப்படுத்தல், செலுத்த வேண்டிய பொறுப்புக்களை சரிபார்த்தல், நிதியியல் பதிவேடுகளை இணக்கம் செய்தல் என்பனவற்றில் சிரமங்களினை எதிர்கொள்ளக் கூடும், மேலும் முறையான பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் இல்லாமையானது இணக்கப்பாட்டுச் சிக்கல்கள், சச்சரவுகள் மற்றும் தீர்மானம் எடுத்தலில் சவால்கள் போன்றனவற்றினை விளைவிக்கும். | உடன்படவில்லை. 25 பாலங்கள் மீள்நிர்மானித்தல் செயற்திட்டமானது RDA வின் ஓர் பிரிவாக செயற்படுவதனால் அனைத்து கொடுப்பனவுகளும் RDA வின் நிதிப்பிரிவினால் செய்யப்படுகின்றது. எதிர்காலத்தில் இப் பிரிவானது RDA விடம் முறையாக கையளிக்கும் போது கூறப்பட்ட ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களினை பூர்த்தி செய்து முடிவுறுத்துவதற்காக முகாமைத்துவ கணக்கய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| v. | பிரிவு 5.13 இன் பிரகாரம், செயற்திட்ட குறிக்கோல்கள், எதிர்கொள்ளும் சவால்கள், கற்றுக்கொண்ட பாடங்கள், முன்மொழியப்பட்ட எதிர்கால | உடன்பட்டனர். இச் செயற்திட்ட பிரிவிற்காக RDA வின் பணிப்பாளர் நாயகத்தினால் பிரிவுத் | விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களினை பூர்த்தி செய்து முடிவுறுத்துவதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் மற்றும் நிலைத்திருக்கும் தன்மைகள் என்பன உள்ளடங்களான ஓர் விரிவான அறிக்கையினை செயற்திட்ட பணிப்பாளர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு மேலதிகமாக, முன்னய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட சொத்துக்களின் மீதிகள், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் மற்றும் உண்மையாக மாற்றல் செய்யப்பட்ட மீதிகள் போன்றனவற்றினை விபரிக்கும் ஓர் இணக்கக் கூற்று இறுதி அறிக்கையுடன் வழங்கப்படல் வேண்டும். இப் பெறுமதிகளுக்கு இடையே ஏதாவது வித்தியாசங்கள் காணப்படின் முறையான தெளிவுபடுத்தல் வழங்கப்படல் வேண்டும். இது எதிர்கால செயற்திட்டங்களிற்காக கற்றுக்கொண்ட பாடங்களை அடையாளம் கானுதல், பொருண்மை பிறழ்கூற்றுக்கள், முறைகேடுகள் மற்றும் சொத்துக்களின் இழப்பு போன்றனவற்றிற்கான ஆபத்தினை குறைத்தல் போன்றனவற்றினை பாதிப்பதுடன் செயற்திட்ட முடிவில் வெளிப்படைத்தன்மை, பெறுப்புக்கூறல் மற்றும் வினைத்திறனான ஆளுகை போன்றனவற்றினை மேம்படுத்துகின்றது. இருப்பினும், அவ்வாறான அறிக்கை மற்றும் தெளிவுபடுத்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | தலைவர் நியமிக்கப்பட்ட பின்னர் ஓர் விரிவான செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை தயாரிக்கப்படும். | முகாமைத்துவ கணக்கய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| vi. | பிரிவு 5.15 இன் பிரகாரம், தொடர்புடைய வரிசை அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் செயற்திட்ட இலக்குகளின் அடைவு, செயற்திட்ட செயலாற்றல், அனைத்து சொத்துக்களின் மாற்றல், பொறுப்புக்களின் தீர்ப்பனவு மற்றும் செயற்திட்டத்தின் நிலைபேறு தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்றவற்றினை உள்ளடக்கிய ஓர் விரிவான அறிக்கையினை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், இச் செயற்திட்டம் தொடர்பாக அவ்வாறான ஓர் விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை. 2023 சனவரி 31 இல் PMU மூடப்பட்டதன் பின்னர், இச் செயற்திட்டம் RDA வின் ஓர் பிரிவாக பணிப்பாளர் நாயகத்தின் கீழ் கையாளப்படுகின்றது. | விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களினை பூர்த்தி செய்து முடிவுறுத்துவதற்காக முகாமைத்துவ கணக்கய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

### 3.2 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது காணி சுவீகரிப்பிற்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் ஏற்பாடுகள் | உடன்பட்டனர். | செயற்திட்டப் பணிப்பாளர் வேண்டப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | என்பனவற்றிற்கான ஓர் பதிவேட்டினை பராமரிக்கவில்லை. அதன் பின்னர், இச் செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு விபரங்கள் 2026 மார்ச் 31 ஆம் திகதிய வேண்டுகோள் கடிதத்திலிருந்து 1 மாதத்தின் பின்னர் கூட கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. எனவே, மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான இழப்பீடு மற்றும் வட்டிக்கான கொடுப்பனவு மற்றும் ஏற்பாடுகள் ரூபா 68.92 மில்லியனின் பூரணத்துவம் மற்றும் உண்மைத்தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாமலிருந்தது. | | வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38(1)(இ) வின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் காணி சுவீகரிப்பு செயன்முறைக்கான ஓர் வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை காணப்படுவதனை உறுதி செய்வதுடன் எழுத்து மூலமான அறிவுறுத்தலும் வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடன் வழங்குனரினால் கடன் மீளப்பெறலினை இடைநிறுத்தியதன் காரணமாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், 2023 சனவரி 31 அளவில் PMU ஆனது மூடப்பட்டிருந்தது. இருப்பினும், PMU ஆனது பத்தரமுல்லையிலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையிலுள்ள ஓர் அலுவலகத்தினை மூடாமல் தொடர்ச்சியாக பராமரித்து வருவதுடன், 2025 ஆம் ஆண்டிற்காக கட்டிட வாடகையாக ரூபா 3.36 மில்லியன் செலவு ஏற்பட்டுள்ளது. | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவானது (PMU) செயலாளரின் தீர்மானத்தின் பிரகாரம் முடிவுறுத்தப்பட்டிருந்தும், செயற்திட்ட ஆவணங்களை பாதுகாப்பதற்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்பாட்டு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கும் அப் பிரிவு அலுவலகம் தொடர்ந்தும் பேணப்படுகின்றது. PMU மூடப்பட்டதன் பின்னர், இச் செயற்திட்டம் RDA வின் ஓர் பிரிவாக RDA பணிப்பாளர் நாயகத்தினால் கையாளப்படுகின்றது.<br>மேலும், 2024 மார்ச் 18 இல் நடைபெற்ற NOR கூட்ட இல 33 இல் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், மீதமாகவுள்ள வேலைகள் உள்நாட்டு நிதிகளினைப் பயன்படுத்தி தொடரப்படுகின்றது.<br>அதன்படி, 2026 மார்ச் 31 வரை அதே அலுவலக வலாகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.<br>இச் செலவுகள் RDA வினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. | முறையான அனுமதி இல்லாமல் PMU ஆனது தொடர்ந்து இயங்க முடியாது. பிரதான கணக்கீட்டு உத்தயோகத்தர் இவ் விடயம் தொடர்பில் ஓர் முறையான விசாரணையினை நடாத்த வேண்டும். |